1979 மார்ச் 17]

வாகனச் சட்டப்படி பாடி கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகின்றது. அப்படி இதிலே சிரமங்கள் ஏற்படுமானால், அப்படி இருக்கின்ற இடத்திலே இந்த நான்கு மாதங்களுக்குள் பாடி கட்டுவதற்காக அப்போது தனியார்களிடம் ஒப்படைக்கப் படுகின்றது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, பாடி கட்டு வதற்குத் தனியார்களிடம் காண்ட்ராக்ட் விடுவதற்குப் பதிலாக, அரசுத் தரப்பிலேயே பாடி கட்டும் தொழிற்சாலையை மேலும் அதிகப்படுத்தி, அதிலே அதிகப்படியான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆண்டிலே மாதங்கள் பூராவும், வாரங்கள் பூராவும் பேருந்துகளுக்கு பாடி கட்டும் நிலை இல்லாத காரணத்தாலும், அவ்வப்போது பேருந்துகளுக்கு உரிமம் வழங்கப்படுகின்றபோது, பாடி கட்டும் நிலை ஏற்படுகின்றது. எனவே, ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி, பணியாளர்களை அதிகப்படியாக அமைத்து விடுவோமானால், பல மாதங்கள், வேலை இல்லாமல் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், போக்குவரத்துக் கழகங்களிலே பாடி கட்டப்படுகின்றது என்றும், சில நேரங்களிலே தனியார்களிடமும் பாடி கட்டப்படுவதாகச் சொன்னார்கள். தனியார்களிடம் அப்படி பாடி கட்டும்போது, எவ்வளவு அதிகமாகச் செலவாகிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலே செலவாவதைவிட ரூ. 3,000 முதல் ரூ. 5,000 வரை குறைவாகத் தான் தனியார்களிடம் பாடி கட்டுவதால் ஏற்படுகின்றது என்ற கணக்கு அரசுக்கு வந்திருக்கிறது.

Cycle Rickshaws used for school students.

* Q. No. 451—

THIRU SALEM M. ARUMUGAM : Will the Hon. the Minister for Transport be pleased to state :

[1979 மார்ச் 17

(*a*) whether the Police administration in Madras City is aware of Cycle rickshawmen carrying a large number of school students to schools; and

(*b*) if so, the action taken to prevent such practices?

[முற்பகல் 10-30]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சிறார்களை அவர்களின் வீட்டிலிருந்து பள்ளிக்கும் பள்ளியில் இருந்து வீட்டுக்கும் அழைத்துச செல்வதற்குப் பயன்படுத்தப்படும் தனியார் பள்ளிகளுக்குச் சொந்தமான சைக்கிள் ரிக்ஷாக்கள் 1911-ஆம் ஆண்டு மத்திய வாடகை வண்டிச் சட்டத்தின் (Hackn y Carriage Act) வரம்பின் கீழ் இதுகாறும் கொண்டு வரப்படாததால் அத்தகைய ரிக்ஷாக்கள் மீது நடவடிக்கைகள் ஏதும் சட்டரீதியாக எடுக்கப் படவில்லை. தனியார் பள்ளிகள் மாணவர்களிடமிருந்து மாதச் சம்பளத்தில் இதற்கும் வாடகை வாங்குவதாக தகவல் அரசுக்கு வந்திருக்கிற காரணத்தாலும், இந்த வாகனங்கள் தகுதிச் சான்றிதழ் (Fitness Certificate) பிரேக் தகுதி (brake fficiency) போன்றவற்றுக்கும் இதுகாறும் உட்படுத்தப்படவில்லை என்ற காரணத்தாலும் பாதுகாப்பு கருதி இத்தகைய வாகனங்களை (Hackney Carriage Act) கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உடனடி நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: சைக்கிள் ரிக்ஷாக்களில் சிறுவர்களை ஏற்றிச் செல்வதைத் தவறு என்று கூறவில்லை. பாதுகாப்புக் கேற்ற சூழ்நிலை இல்லாத காரணத்தால் விபத்து ஏற்படுகிற நிலை இருப்பதால் 'வேன் டைப்' ல் கூடு கட்டிய வண்டிகளாக அமைத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு அறிவுறுத்துமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: கூடு கட்டின வண்டிகளைப் பல பள்ளிகள் நடைமுறையில் வைத்திருக்கின்றன. அதிகமான அளவில் இந்த சைக்கிள் ரிக்ஷாக்களில் சிறுவர்களை ஏற்றிச் செல்லுகிற காரணத்தால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதை அரசு உணர்ந்து ஹாக்னி காரேஜ் ஆக்டின் வரம்புக்குள் கொண்டுவந்து கட்டுப்படுத்த முடிவு செய்திருக்கிறது.

திரு. அ. க. அரங்கநாதன்: கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு ஏற்பாடு செய்து அதன் மூலம் மாணவர்களை ஏற்றிச் செல்வதற்கு வழிவகை செய்ய முடியுமா?

1979 மார்ச் 17]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக சைக்கிள் ரிக்ஷாக்களை அளித்துத்தான் சிறுவர்களைப் பள்ளிக்கு அழைத்துச் செல்லவேண்டுமென்றில்லை. அந்த சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் அதிகப்படியான குழந்தைகளை ஏற்றிச் செல்கிற காரணத்தால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதைக் கணக்கில் எடுக்காமல் இருக்கும் காரணத்தால் இதை வாகனச் சட்டத்தின் கீழ் உட்படுத்த அரசு முடிவு செய்து பரிசிலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : பள்ளிகளுக்குச் சிறார்களை ஏற்றிச் செல்லுகிற ரிக்ஷாக்கள் டிராபிக் அதிகமாக இருக்கும் காரணத்தால் குறித்த நேரத்தில் போகமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, அரை ஹார்ஸ் பவர் மோட்டார் வைத்து அந்த ரிக்ஷாக்களை ஓட்ட வேண்டுமென்று அரசு ஆணையிடுமா ? அந்த சைக்கிள் ரிக்ஷாக்காரர்களுக்கு மோட்டார் வாங்கிக் கொடுக்கவும் அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கெனவே அரசு மோட்டாரைஸ்டு சைக்கிள் ரிக்ஷாக்களாக மாற்ற முன்வருகிறவர்களுக்கு உதவி செய்வதாக அரசு ஆணையிட்டிருக்கிறது. அந்த வகையில் பல ரிக்ஷாக்கள் மோட்டாரைஸ்டு ரிக்ஷாக்களாக மாற்றப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில் மோட்டாரைஸ்டு சைக்கிள் ரிக்ஷாக்களும் அதிகப்படியான மாணவர்களை ஏற்றிச் செல்வதன் காரணமாகத்தான் விபத்து ஏற்படுகிறது.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : பள்ளிகளுக்குச் சிறார்களை ஏற்றிச் செல்லும் சைக்கிள் ரிக்ஷாக்களை சில மாவட்டங்களில் கூண்டு வண்டி போல் அமைத்திருக்கிறார்கள். சென்னை நகரத்திலுள்ள பள்ளிகளுக்குச் செல்லும் சைக்கிள் ரிக்ஷாக்களை அந்த முறையில் அமைக்க வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா ? இன்னொரு கேள்வி இது சம்பந்தப்பட்டது அல்ல என்றாலும் அமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒருவரே பத்து பதினைந்து சைக்கிள் ரிக்ஷாக்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ரிக்ஷாக்கள் ஓட்டுநர்களுக்கே சொந்தம் என்ற முறையில் கொண்டுவர அந்த ரிக்ஷாக்களின் உரிமையாளர்கள் அதை விற்க முனையும்போது ஓட்டுநர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்ற முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி கூடு கட்டிய சைக்கிள் ரிக்ஷாக்களைப் பயன்படுத்தினால் விபத்துக்கள் குறையும் என்ற அடிப்படையில் பள்ளி நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கலாம்.

இரண்டாவது ஓட்டுநர்களுக்கே உரிமம் வழங்கவேண்டுமென்பது பற்றியது. ஈஹக்னி காரேஜ் ஆக்டில் ஓட்டுநர்களே உரிமையாளர்கள் என்ற முறையில் புதிய சட்டம் கொண்டு வர இருக்கிறோம். அந்தச் சட்டம் வந்த பிறகு இந்தப் பிரச்சினை நீங்கிவிடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பொய்கை ஆற்றின் குறுக்கே அணை.

*வினா எண். 452—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், தோவாளை வட்டத்திற்கு உட்பட்ட ஆரல்வாய்மொழி பகுதியிலுள்ளவர்களது பாசன வசதி மற்றும் குடிநீர் வசதிகளுக்காக பொய்கை ஆற்றின் குறுக்கே அணை ஏதேனும் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில், அத்திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் 1979–80 ஆம் ஆண்டிற்கான சிறப்பு சிறு பாசனத் திட்டங்களில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு அரசின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1979–80 ஆம் ஆண்டிலே இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே அந்தத் திட்டத்தினால் குமரி மாவட்டம் மட்டுமல்லாமல் அதனையொட்டியிருக்கிற இராதாபுரம் தொகுதியிலே உள்ள வறட்சி மிகுந்த பகுதிகளுக்கும் பாசன வசதியையும், குடிநீர் வசதியையும் ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினாலே ஏறத்தாழ 716 ஏக்கர் 49 சென்ட் நிலத்திற்கு நிரந்தரப் பாசனம் உறுதியளிக்கப்படுகிறது. 582 ஏக்கர் 45 சென்ட் நிலம், பாசனம் இல்லாமல் விடப்பட்ட நிலம் பாசனத்திற்குக் கொண்டுவரப்பட முடிவு